குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.95/2019

அ.சா. 1

2024–ம் ஆண்டு மே 10–ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி –01 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காவியா | ஜாதி | |
| கணவர் பெயர் | ரமேஷ் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.08 மணி,

Accused A2. Ramasamy present. A1. Kaliyamoorthy absent. Petition u/s 317 Cr.P.C filed and allowed. Advocate Mr. R.Kannan present for Accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சமுத்திரத்தில் குடியிருந்து வருகிறேன். சம்பவ நடந்த காலத்தில் தாரமங்கலம் நெல்லிகுப்பம் தெருவில் குடியிருந்தேன். கடந்த 18.08.2018 ம் தேதி மாலை எனது கணவர் ரமேஷ் பெற்றோரை பார்ப்பதற்காக சமுத்திரம் என்ற ஊருக்கு சென்றார். 19.08.2018 ம் தேதி அதிகாலை 01.00 மணியளவில் நான் எனது குழந்தைகளுடன் வீட்டில் தூங்கி கொண்டு இருந்த போது வாசற்கதவு திறப்பது போல் சத்தம் கேட்டது.

2. நான் கதவை திறந்தவுடன் சட்டை அணியாமல் இருந்த ஒரு நபர் நான் கழுத்தில் அணிந்து இருந்த 5 பவுன் தங்க செயினை பறித்து கொண்டு போய்விட்டார்.

நான் சத்தம் போட்டவுடன் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வந்தார்கள். சேட்டு, ராமாயி ஆகியோர் வந்தார்கள். என் கணவருக்கு தகவல் சொல்லி வரச் சொன்னேன். 20.08.2018 ம் தேதி காலை இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(அந்த புகார் அ.சா.ஆ– 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. 01.10.2018 ம் தேதி காவல் நிலையத்தில் இருந்து போன் செய்து எனது செயினை திருடியவர்களையும் செயினையும் கண்டு பிடித்துவிட்டதாக கூறி காவல் நிலையம் வரச் சொன்னார்கள். காவல் நிலையத்தில் எனது 5 பவுன் செயினை காட்டினார்கள். திருடிய நபர்களை அடையாளம் காட்டினார்கள். நான் என்னிடம் செயினை பறித்த நபரை போலீசாரிடம் அடையாளம் காட்டினேன். அவரது பெயர் கலியமூர்த்தி கடலூர் மாவட்டம் அவரது உடன் வந்தவரின் பெயர் ராமசாமி.

4. எதிரி கலியமூர்த்தியை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். ( 1ம் எதிரி கலியமூர்த்தி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.) அதன்பின்பு நீதிமன்றத்தில் மனு செய்து நகையை பெற்றுக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தங்க செயின் என்னுடையது தான். **(அந்த புகைப்படம் அ.சா.ஆ– 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

5. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: 01.20 மணி,

ஒம்/– எஸ்.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.